மதிய உணவாக
கோழி பிரியாணி
குஷிமிக்க நூடில்ஸ் வகைகள்
றிக்கோ
கோப்பியை அரைத்துப்
பெற்றுக்கொள்ள
செந்தாமரை
(றிக்கோ)
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

★ ஐஸ்கிறீம் வகைகள்
★ பாலூத்தா சர்பத்
★ மிக்ஸ் ஜூஸ்க்கும்
செந்தாமரை
(றிக்கோ)
குளிர் தடாகம்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 09 சனிக்கிழமை (24 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 28

ஆசிய வங்கியின் உதவி நிறுத்தம்!

நிதி துஷ்பிரயோகம் அம்பலம்

கொழும்பு, டிசம்பர் 24

ஸ்ரீலங்காவுக்கான நிதி உதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி தற்காலிமாக நிறுத்திவைத்துள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழங்கப்பட்ட நிதி உதவியை முன்னைய அரசாங்கம் துஷ்பிரயோகஞ் செய்தது கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கையை ஆசிய அபிவிருத்தி வங்கி எடுத்து இருப்பதாக நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பிடப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய நிதியை முன்னைய அரசு கலியாட்ட விழாக்கள் மற்றும் அரச கொண்டாட்டங்களுக்கு பயன் படுத்தியதாக நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சில ஆண்டுகளில் பெரும்பாலான நிதியை ஸ்ரீலங்கா மின்சாரசபை, வீடமைப்பு நிர்மாண அமைச்சு ஆகியன விரயம் செய்தன என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி குற்றம் சாட்டியது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி தொடர்ந்து விரயம் செய்யப்பட்டதால், இவ்வங்கி இலங்கைக்கான நிதி உதவியை 15 கோடி டொலராக இந்த ஆண்டில் குறைத்தது. கடந்த ஆண்டில் 20 கோடி டொலரை ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு அளித்தது.

இதேவேளை—

உறுதியளிக்கப்பட்ட நிதி உதவியான 80 கோடி டொலரை தரும்படி

(4 ஆம் பக்கம் பார்க்க)

உணவுக் கப்பல் மூழ்கியது?

கொழும்பு, டிச. 24

யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் சென்று விட்டு, காங்கேசன் துறையில் இருந்து திருமலை நோக்கித் திரும்பிச் சென்று கொண்டிருந்த கப்பல் ஒன்று நேற்று முன்தினம் முல்லைத் தீவுக்கு அண்மையில் கடலில் மூழ்கியது.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் இத்தகவலை தெரிவித்ததாக 'லங்கா தீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடலில் மூழ்கிய கப்பல் தொடர்பான மேலதிக விவரங்கள் எதுவும் இச் செய்தி நேற்றிரவு அச்சுக்குப் போகும் வரை வெளியாகவில்லை.

(ஐ—6)

கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், டிச. 24

கிளாலி – பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

(ஐ—3)

புலிகளின் கடிதம் அரசு ஆராய்கிறது!

பதில் அனுப்புவது தாமதமாகும்?

யாழ்ப்பாணம், டிசம்பர் 24

உத்தேசப் பேச்சுக்களில் முதற்கட்டமாக தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத தீர்ப்பது குறித்தே ஆராயவேண்டும் என வலியுறுத்தி தலைவர் வே. பிரபாகரன் எழுதிய பதில் கடிதத்தை அரச உயர்பீடம் ஆராய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் அரசு முடிவு எடுப்பதற்கு சில தினங்கள் தாமதமாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

உத்தேச பேச்சுவார்த்தை தொடர்பாக தமது விருப்பத்துக்கு ஏற்ப படைகளை இணங்கிச் செயற்பட வைக்க முடியாத இக்கட்டான நிலையில் இருக்கும் ஸ்ரீலங்கா அரசு —

பேச்சுவார்த்தைகளில் முதலில் இடம்பெற வேண்டிய விடயங்களின் அட்டவணை தொடர்பாக திட்டவட்டமான தலைப்புக்களைக் தெரிவித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அனுப்பியிருக்கும் கடிதத்துக்கு பதிலளிப்பது நெருக்கடியாக இருக்கும் என

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கிலும், கொழும்பிலும்

இருமுனைத் தாக்குதல் புலிகள் நடத்தலாம்!

கொழும்பு, டிச. 24

வடக்கு – கிழக்கு போர் முனைகளிலும் கொழும்பு மாநகரிலும் சமகாலத் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தும் சாத்தியத்தை நிராகரிக்க முடியாது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தகவலை "ஐலண்ட்" நாளிதழ் வெளியிட்டுள்ளது.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு நகர வீதிகளில் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கக் காணப்பட்டனர்.

அரசின் மீது அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கையை விடுதலைப் புலிகள் மேற்கொள்ளக் கூடும் என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் நம்புகின்றனர்.

(உ—எ)

வேலை நிறுத்தங்களுக்கு தீர்வுகாண அமைச்சர் குழு!

ஜனாதிபதி சந்திரிகா நியமித்தார்

கொழும்பு, டிச. 24

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள வேலை நிறுத்தங்களை முடிவுக்கு கொண்டு வரும் வழிவகைகளை ஆராயுமுகமாகவும், எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய தொழில் பிணக்குகளை பேச்சுவார்த்தை மூலம் சமரசமாகத் தீர்த்து வைக்கவும் என அமைச்சர்கள் குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்திருக்கிறார்.

இக்குழுவில் இடம் பெறுபவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி செயலகத்தினால் கடந்த வியாழன் அனுப்பி வைக்கப்பட்டன

இதேவேளை— வேலை நிறுத்தங்கள், தொழிற் பிணக்குகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நவியான பிரிவு ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் இயங்கவிருக்கிறது.

24 மணி நேரமும் இயங்கும் இப்பிரிவுக்கு தகவல்களை வழங்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ஐ—எ)

ரயில் நிலைய அதிபர்களும் வேலை நிறுத்தம் செய்வர்!

ரயில் நிலைய அதிபர்களும் வேலை நிறுத்தஞ் செய்யப் போவதாக அச்சுறுத்தி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

1995 ஆம் ஆண்டுக்கான தங்களின் இடமாற்ற உத்தரவுகளை அதிகார வர்க்கத்தின் உதவியுடன் ரத்துச் செய்த 11 ரயில்வே கட்டுப்பாட்டாளர்களை உடனடியாக இடமாற்றம் செய்யாவிட்டால் நாட்டில் உள்ள ரயில் நிலைய அதிபர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப்போவதாக அறிவித்துள்ளன.

நாட்டில்ஆயிரத்து200ரயில் நிலைய அதிபர்களும், அதே தொழில் தரத்தைக்கொண்ட 65 ரயில் கட்டுப்பாட்டாளர்களும் உள்ளனர்.

(ஐ—எ)

27 ஆம் திகதி வரை அரசுக்கு தாதிமார்கள் காலக்கெடு

கொழும்பு, டிச. 24

அரச தாதிமார் சங்கம் தமது கோரிக்கைகளை நிறைவேற்ற அரசுக்கு இம் மாதம் 27 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கியுள்ளது.

அதுவரை பயிற்சி பெற்ற கடமைகளை மட்டுமே தாம் செய்யப்போவதாகவும் — மேலதிகமாக எவ்வேலையையும் செய்யப்போவதில்லை என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

கூடுதலான அலவன்ஸ், மேலதிக வேலைக் கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும் என்பதே தாதிமாரின் கோரிக்கைகளாகும்.

ஐ.தே.க. தொழிற்சங்கவாதி நேற்று கைதாகி பிணையில்!

கொழும்பு, டிச. 24

முன்னாள் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினரும் சுதந்திர சேவையாளர் சங்கத் தலைவருமான டாக்டர் ராஜித சேனரத்தினா நேற்றுக் காலை இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பின் தாம் முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை விசாரிக்கப்பட்டதாகவும்—

அதன் பின்னரே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதாகவும் டாக்டர் ராஜித சேனரத்தினா தெரிவித்தார்.

இது ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று தமது தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்தை அடுத்தே தாம் விடுவிக்கப்பட்டதாகவும்—

உயர் மட்டத்தில் இருந்து கிடைத்த கூத்தரவின்படியே தாம் கைது செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

(உ—ஐ—6)

மோட்டர் மூலம் தூரத் தாக்கும் திறனை அதிகரிக்க புலிகள் முயற்சி

காரைநகர் மீது தொடர் தாக்குதல் நடக்கலாமாம்

கொழும்பு, டிச. 24

கனரக ஆயுதங்களை விருத்தி செய்யும் திட்டத்தில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி "ஐலண்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

பாதுகாப்பான தூரத்தில் இருந்து கொண்டு இராணுவ நிலைகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தும் நோக்கத்துடன் —

தங்களால் தயாரிக்கப்படும் பல்வேறு ரக மோட்டர்களின் வீச்செல்லையை அதிகரிக்க விடுதலைப் புலிகள் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் விவரித்துள்ளன.

இதற்கிடையில் —

காரைநகரில் கடற்படையினரின் நிலைகள் மீது கடந்த திங்கள் அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டர் தாக்குதலில் குறைந்தது இரண்டு கடற்படையினர் காயமடைந்தனர் என்று அதிகாரபூர்வ பாதுகாப்பு வட்டாரப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 19 ஆம்திகதி காலை 5.30 மணிக்கு இத் தாக்குதல் ஆரம்பமானது.

இவ்வாரத்தில் காரைநகர் கடற்படை நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய இரண்டாவது தாக்குதல் இது என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

அடுத்த சில தினங்களில் விடுதலைப் புலிகள் காரைநகர் மீது தொடர் மோட்டர் தாக்குதல்களை நடத்தக் கூடும் என்றும் இராணுவ அதிகாரிகள் நம்புகின்றனர்.

"எமக்கு ஆத்திரமூட்ட அவர்கள் முயற்சித்து வருகின்றனர்" என வடபகுதி முகாமில் நிலைகொண்டுள்ள ஓர் அதிகாரி தெரிவித்தார்.

— இவ்வாறு "ஐலண்ட்" மேலும் தெரிவித்தது.

3,000 கோடி ரூபாவுக்கு இரகசிய ஆயுத பேரம்!

அம்பலமானது என்கிறார் சந்திரிகா

மணிலா, டிச. 24

யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்கு எனத் தெரிவித்து ஆயுதப் பேரம் மூலம் பெருமளவு தரகுப்பணம் பெற முயற்சி நடந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

அனுராதபுரத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய சந்திரிகா —

சுமார் 3 ஆயிரம் கோடி ரூபா பெறுமானமுள்ள இரகசிய ஆயுத பேரம் ஒன்றை புதிய அரசு கண்டுபிடித்துள்ளதாகக் குறிப்பிட்டார் என்று வெரிற்தாஸ் வாரஇனாலி தகவல் வெளியிட்டது.

(உ—3)

கடற்படையிலும் மாற்றம்

கொழும்பு, டிச. 24

இராணுவ கட்டமைப்பில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டது போன்று கடற்படையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கொமொடோர் ஜே. ரி. ஜி. சுந்தரம் கடற்படை நடவடிக்கைப் பணிப்பாளராகவும் —

கொமொடோர் தயா சந்த சிறி கிழக்கு கடற்படை பிரதேச தளபதியாகவும் —

கப்டன் கரதிஜி மனசிங்க மேற்கு கடற்படை பிரதேச தளபதியாகவும் — நியமனம் பெற்றுள்ளனர்.

றியர் அட்மிரல் டி. கே. தஸநாயக்கா இந்தியாவில் உள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் பயிற்சிபெற தெரிவாகியுள்ளார்.

(உ—3

பலாலி - கோப்பாய்

ஆசிரிய கலாசாலைகள் விரைவில் மூடப்படும்?

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது

இவ்விரு கலாசாலைகளுக்கும் போதியளவு மாணவர்கள் அனுமதி பெறாதகாரணத்தால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரு கலாசாலைகளிலும் ஆயிரம் மாணவ ஆசிரியர்கள் பயிற்சி பெற வசதிகள் இருந்தபோதும், தற்சமயம் 38 பேரே பயிற்சிபெற்று வருவதாகவும்—

இவ்வாண்டு அனுமதி பெற 25 மாணவ ஆசிரியர்களே விண்ணப்பித்துள்ளதாகவும்— தெரிவிக்கப்பட்டது

சில துறைகள் மாணவ ஆசிரியர்கள் அனுமதி பெறாததால் இயங்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

பயிலுநர் ஆசிரியர்கள் என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, தொலைக் கல்வி பயிற்சியை அவர்கள் பெறவேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்ததால் இளம் ஆசிரியர்கள் கலாசாலைகளில் சேர விண்ணப்பிப்பதில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(உ—3)

இந்திய மனிதஉரிமை ஆணைக்குழு ஈழ அகதிகள் முகாம்களுக்கு விஜயம்

சென்னை, டிச. 24

முன்னாள் பிரதம நீதியரசர் ரங்கநாத் மிஸ்ரா தலைமையிலான இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள 130 முகாம்களில் மூன்றைப் பார்வையிட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளிடமிருந்தும், முகாம்களுக்கு விஜயம் செய்யாமறில அரசால் அனுமதி மறுக்கப்பட்ட அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனங்களிடம் இருந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து இவ்விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்பின்னர் திரு. மிஸ்ரா சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

நானும் ஆணைக்குழு உறுப்பினர்களும் பல அகதிகளைச் சந்தித்துப் பேசினோம். அவர்களில் பெரும்பாலானோர் விரைவில் தாயகம் திரும்பவே விருப்பம் தெரிவித்துள்ளனர். முகாம்களில் உள்ள அகதிகள் தாயகம் திரும்பும்படி நிர்ப்பந்திக்கப்படுவது குறித்து சாட்சியங்கள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை.

வேலூரில் உள்ள சிறப்பு முகாம் ஒன்றில், விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 300 அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களை நேராக யாழ்ப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்திமுரசு

அப்ப... உங்கை படிக்கிற ஆக்களைவிட பகிடிவதை வையள்தான் கூடப்போலை!

மேஜர் ஜெனரல் பதவியில் 13 பேர்

கொழும்பு, டிச. 24

இலங்கை இராணுவத்தில் உள்ள மேஜர் ஜெனரல்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது.

45 பிரிகேடியர்கள், 47 கேணல்கள், 131 லெப்டினன்ட் கேணல்கள் இப்போது இராணுவத்தில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

[illegible] தகவல் [illegible] இராணுவத்தை [illegible] தெரிவிக்கப்பட்டது.

(உ—எ)

ஆசிரியருக்கு வந்த கோபம்!

கொழும்பு, டிச 24

இடமாற்றம் கோரி விண்ணப்பித்த ஆசிரியர் ஒருவர் இடமாற்றம் கிடைக்காத கோபத்தில் கல்வி அலுவலக பெண் எழுது வினைஞர் ஒருவரை அவரது அலுவலகத்தில் வைத்து கத்தியால் குத்தினாராம்!

இச்சம்பவம் புத்தளம் பிராந்திய கல்வி அலுவலகத்தில் அண்மையில் நடந்திருக்கிறது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர் தற்போது தலைமறைவாகி விட்டார் என்றும்—

புத்தளம் பொலீஸார் இச்சம்பவம் குறித்து விசாரணை [illegible] என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ—3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

மகாலக்சுமி திருக்குறள் நாட் கலண்டர்கள் விற்பனையாகின்றன. விலை 65/-. மாதப்படக் கலண்டர்கள் விலை 14/-. வியாபாரிகள் தங்கள் விலாசமிட்டுப் பதிப்பித்து கொள்ளலாம். விசேஷ கழிவுண்டு. மகாலக்சுமி அச்சகம், 127, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (8096)

சகல பாடசாலை புத்தகங்களும் குறித்த விலையில் இருந்து 5% கழிவுடன் விற்பனையாகின்றன. பாடசாலை உபகரணங்கள், கொப்பிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன நியாய விலையில் விற்பனையாகின்றன. ஞானம் புத்தக நிலையம், நாச்சிமார் கோயிலடி, 635, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (8063)

இனவிருத்திக்கு உகந்த சுத்தமான ஜமுனா பாறி ஐந்து மாத கடாக்குட்டிகள் இரண்டு விற்பனைக்குண்டு. இல. 3, சீனியர் லேன் (தட்டாதெரு சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (34325)

பட்டிக்கு உகந்த இரண்டு சடை சணல் கடாக்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி இல. 15, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். (34327)

விற்பனையாகிறது

சீவம் கலண்டர்கள் பொக்கற் கலண்டர்கள், வியாபாரத்திற்கு அடித்து கொடுப்பதற்குரிய சகல கலண்டர்களும், டயறிவகைகளும் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 165, மின்சார நிலையம். தலைமையகம்: மக்மிலன், யாழ்ப்பாணம். (சி-9929)

காணி விற்பனைக்கு

சுண்டிக்குளி கொழும்புத்துறை வீதியில் பிரபல பாடசாலைகளுக்கு அண்மையில் கிணறு, மூன்று பக்க மதிலுடன் 1½ (ஒன்றரை) பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: K. சிவசுப்பிரமணியம், பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி. (34053)

நத்தார் வாழ்த்துமடல்கள்

புத்தம் புதிய நத்தார், புதுவருட வாழ்த்துமடல்கள், மியூசிக்கல் வாழ்த்துமடல்கள் விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு உண்டு. ஆனந்தஸ், புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (34279)

அப்பியாசக் கொப்பி

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விற்பனையாகின்றன. நேஷ அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936

பஞ்சாங்கம்

ஜோஸ்யர் பஞ்சாங்கம். ஜோஸ்யரின் புத்தாண்டு வெளியீடு முப்பதாம் திகதி கிடைக்கும். வருடம் முழுவதும் தேவையான பஞ்சாங்கத்தை வாங்கி எமக்கும் ஒரு வரி எழுதுங்கள். (34315)

வாடகைக்கு

நல்லூரில் Flat கூரை, சுருக்கு கதவுடன் கூடிய இரு கடைகள் வாடகைக்கு உண்டு. கூட்டாக வியாபாரம் செய்ய விரும்பும் பங்காளிகளும் விரும்பப்படுவர். தொடர்பு: இல. 123, பருத்தித்துறை வீதி, நல்லூர். (இந்து விடுதிக்கு முன்பாக) (34317)

ஜாதகம்

'Life Guide' ஜாதகப் பலாபலன், திருமணம் தாமதம், கல்வி, தொழில் போன்ற மூன்று கேள்விகளுக்கு விசேஷ பதில். குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். இல 58, கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம். (34324)

இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக்கோழிகள் நாள்தோறும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34328)

கோழிக்குஞ்சு விற்பனை

Prima Broiler குஞ்சுகள், சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34329)

தையல் பயிற்சி

ஆண், பெண் இருபாலரதும் தையல் வகுப்புகள் 6 மாத, 3 மாத தவணை முறையிலும் கணித முறைப்படி பயிற்சி கொடுப்பதுடன், முடியும் காலத்தில் சான்றிதழ்களும் வழங்கப்படும். டிப்புளோமா பயிற்சிபெற விரும்புவர்கள் தங்கள் கால எல்லையை நேரில் தொடர்புகொள்ளல் நன்று. தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: இல. 51, நீராவியடி, யாழ். நகர். "S. N. யோக" தையல் ஆசிரியர். (8098)

கண்டெடுக்கப்பட்டுள்ளது

ஒரு சிறிய மோதிரம் எங்கள் கடைக்குள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். ராசி பட்டுச்சோலை, ராசி சில்க்ஸ், 70, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (சி/37)

வாடகைக்குத் தேவை

திருநெல்வேலி, நல்லூர், வண்ணார்பண்ணை சுற்றாடலில் வீடு அல்லது 'அனெக்ஸ்' வாடகைக்குத்தேவை. உடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் இல. 738, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34318)

'போக்' உடைந்து இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், டிச. 24

சைக்கிள் "போக்" உடைந்து இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் நேற்றுக் காலை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இடம்பெற்றது.

கொழும்புத்துறை விபுலானந்தர் வீதியைச் சேர்ந்த தி. சிவராஜன் (வயது-26) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-17)

விற்பனையாகின்றன

இம்மாதம் 28ஆம் திகதி நடைபெறவுள்ள

உதவி ஆசிரியர் தெரிவு

போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி

★ பொது உளச்சார்பு
பொது அறிவு

அஸ்ரன் வெளியீடு – விலை ரூபா 110/-

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்.

[சி-18]

5-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் நடராஜா சந்திரராஜா
(போஸ்)

(முன்னாள் குகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், தலவாக்கலை)

தோற்றம்: 20 — 02 — 1948 மறைவு: 19 12 — 1989

திதி: 24 — 12 — 1994

எங்கள் அன்பின் ஆருயிர் அப்பாவே! தங்கள் திருமுகம் காணாது எங்களைத் தவிக்கவிட்டு நிம்மதியாய் இறையடி சேர்ந்தீர்களே அப்பா! எங்களின் இதயமெனும் கோயிலில் எங்கள் தெய்வத்தின் திருமுகத்தை தரிசித்து நிற்கும் எங்களுக்கு என்றென்றும் எங்கள் கொழுகொம்பற்ற வாழ்க்கைக்கு துணையிருந்து எம்மை ஆசீர்வதிப்பீர்களாக! கடந்து செல்லும் ஒவ்வொரு வினாடியும் தங்கள் நினைவலைகளை மீட்டு திரும்பவும் எம்முன் நின் திருவுடலை காண மாட்டோமா! என்றும் தங்கள் "போஸ்" என்னும் திருநாமமும் எம் இதயங்களில் அணையாத தீபமாக ஒளி வீசுவீர்களாக!

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றென்றும் தங்கள் நினைவோடு வாழும்;
மனைவி: திருமதி ச. சந்திரராஜா,
பிள்ளைகள்: தினேசன்,
வொ அனுஜா, நிஷாந்

பலாலி வீதி,
கோண்டாவில்.

யாழ்ப்பாண ரஷிக ரஞ்சன சபா
சங்கீதக் கல்லூரி

மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து நடத்தும்

சங்கீத மும்மூர்த்திகள் ஆராதனை

இசை விழா

காலம்: 25-12-94 ஞாயிறு
காலை 8.30 முதல் 12.30 மணிவரை

இடம்: ரஷிக ரஞ்சன சபா மண்டபம்,
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(கலைஞர்கள், ரஷிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்)

(34285) — சபா நிர்வாகிகள்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி.

மீளக் கேள்வி அறிவித்தல் - 1995

வலி. கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய், நீர்வேலி உப அலுவலக எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் இறைச்சிக் கடைகளுக்கான கேள்விகள் என்னால் மீள கோரப்படுகின்றன. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் விநியோகித்தல் —
26-12-1994 ஆம் திகதியிலிருந்து
28-12-1994 வரை

கேள்விகள் ஏற்றல் —
29-12-1994ஆம் திகதி
முற்பகல் 10-00 மணி

கேள்விகள் திறத்தல் —
29-12-1994 ஆம் திகதி
முற்பகல் 11-00 மணி

இறைச்சிக்கடைகள் பெயர்:

1. உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை
2. ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை
3. நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை

க. கேதீஸ்வரன்,
விசேட ஆணையாளர்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.
22-12-1994. (சி-10088)

நத்தார் கால விற்பனை

* நத்தார், புதுவருட வாழ்த்துமடல்கள்
* நத்தார் அலங்காரப் பொருள்கள்
* பாலன் பிறப்பு செற்
* கேக், குளிர்பான தயாரிப்புகள்
* எவர்சில்வர், விளையாட்டுப் பொருள்கள்
* சுவர், கைக்கடிகாரங்கள்
* மண்எண்ணெய் அடுப்புகள்

மற்றும்

பொலித்தீன் வகைகள், நெல்லுடைக்கும் – மாவரைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடவேண்டியது:

ராஜா ஸ்ரோர்ஸ்

67, 69, சந்தோசம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9818)

15-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 19 — 08 — 1939

மறைவு: 09 — 01 — 1980

அமரர்
நடராசா பாலசுப்பிரமணியம்

(முன்னைநாள் இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பொதுச் செயலாளரும், சட்டத்தரணியும்)

திதி: 24 — 12 — 1994

உங்கள் பதினைந்தாவது நினைவு தினத்தில் அஞ்சலி செலுத்தி ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்புப் பிள்ளைகள்,
அம்மா.

"பாலஸ்வனை"
வேலணை மேற்கு,
வேலணை. (34301)

யா/தெல்லிப்பழை
சைவப்பிரகாச வித்தியாசாலை
பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண

பொதுக் கூட்டம்

இடம்: வித்தியாசாலை மண்டபம்
(ஆரம்ப நீதிமன்றக் கட்டடம், நீதிமன்ற வீதி, மல்லாகம்)

காலம்: 25-12-94 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30மணி

பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் இக் கூட்டத்திற்கு தவறாது வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

(8097) —அதிபர்.

BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 95

DAY CLASS

(94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கானது)

பிரிவு III

ஆரம்பம்: 2 - 1 - 1995

காலை 8-00 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
★ பிரிவு I, II இற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

(சி-23)

A/L 95

DAY CLASSES

பகல் நேர வகுப்புக்கள்

A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு
செவ்வாய் – வியாழனில்

ஆரம்பம்: 27 - 12 - 1994
(காலை 9மணி)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

[சி-32]

எழுதுவினைஞர்
போட்டிப் பரீட்சை

பயிற்சி வகுப்புக்கள்

மேற்படி பரீட்சை 07 – 01 – 1995 இல் நடைபெற உள்ளது.

* மொழியறிவு
* பொது உளச்சார்பு

ஆசிரியர்: திரு. குமாரவேலு

மாதிரிப் பரீட்சை உட்பட
பயிற்சி வகுப்புகளும் நடைபெறும்.

ஆரம்பம்: 26 - 12 - 1994
திங்கள் பிற்பகல் 3 மணி

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

[சி-31]

சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ.)

கேள்வி அறிவித்தல்

லொறி விற்பனை

சங்கானை ப. நோ. கூ. சங்கத்துக்குச் சொந்தமான தl-4254 (24/8394) இலக்க மொறீஸ் நோமல் லொறியை விற்பனை செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விக்கான விண்ணப்பப் பத்திரங்கள் மேற்படி சங்கத்தில் ரூபா 50/- கட்டணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மீளளிப்பு வைப்புக் கட்டணமாக ரூபா 1,000/- செலுத்தப்படல் வேண்டும். கூடிய கேள்விக்காரருக்கு லொறியை விற்பனை செய்வதுடன், இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பு சங்கத்தின் பணிப்பாளர் சபைக்கு உண்டு. லொறியை பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் 06-01-1995 ஆம் திகதி பி.ப. 4-00 மணிக்கு முன்னதாக "தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை" என விலாசமிடப்பட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தl-4254 (24/8394) இலக்க வாகனத்திற்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

– பொது முகாமையாளர்.

சங்கானை.
22 – 12 – 1994 [சி-42]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

பந்து உருளுமா?

நத்தாருக்கு முன்னர், அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட இரண்டாவது சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தை கைகூடாமல் போனது ஏன், என்பதற்கான காரணம் இப்போது எல்லோருக்கும் தெளிவாகி இருக்கும்.

விடுதலைப் புலிகளின் அரியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், அதற்கான உள்ளாந்தரங்களை எல்லாம் நேற்று முன் தினம் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் மிக விவரமாக, விளக்கமாக எடுத்துக்கூறிவிட்டார்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை முதலில் தீர்த்துக் கொண்டு, பின்னர் அடிப்படைப் பிரச்சினை குறித்துப் பேசுவது என்று இணங்கப்பட்ட ஏற்பாட்டை அல்லது ஒழுங்கை மாற்றி— மீறி— புதிய முறையில் பேச்சு நடத்துவதற்கு அரசு நினைத்ததே தடங்கலுக்குக் காரணம் என்பதனை அவர் அம்சம் அம்சமாக எடுத்து விளக்கியுள்ளார்.

அரசு தனது ஒக்ரோபர் மாதத்து நிலைப்பாட்டில் இருந்துமாறியதற்கு, நாம் இப்பத்தியில் நேற்றுக் குறிப்பிட்டது போன்று அரசாங்கத்தின் உள்ளுக்குள்ளே இருக்கும் தடங்கல்கள், அழுத்தங்களே காரணம் என்பதும் உறுதியாகிவிட்டது.

மிகக் குறிப்பாக, முதலாவது பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்ட, விடுதலைப் புலிகளால் வற்புறுத்தப்பட்ட, அரச தரப்பினால் பேசுவதற்கு இணங்கப்பட்ட தமிழ் மக்களின் மிகப் பிரதானமான அன்றாடப் பிரச்சினைகள் குறித்து இராணுவம் கடும்போக்கான நிலையில் இருக்கிறது என்றும்—

அதனாலேயே அவற்றைத் தவிர்த்து, அந்த விவகாரங்களில் அகப்படாமல் மெதுவாக நழுவிக் கொண்டு, நேரடியாகவே அடிப்படைப் பிரச்சினை குறித்துப் பேசுவது என்று புதிய நிலைப்பாட்டிற்கு அரசு மாறியிருக்கிறது என்பதனையும்— திரு. பாலசிங்கம் மிகத் துலாம்பரமாக்கி உள்ளார்.

அதாவது சமாதானப் பேச்சு வார்த்தையை முன்னெடுப்பதில் அரசு தனக்குச் சாதகமான ஓர் அணுகுமுறையைக் கைக்கொள்ள முனைகிறது என்பது வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது.

தமிழ்ப் பிரதேசத்தில் இயல்பு நிலையைக் கொண்டு வருவதனை ஒதுக்கி வைத்து விட்டு, பல சிக்கல்களைக் கொண்ட அரசியல் பிரச்சினையைப் பற்றிப் பேசுவது என்ற புதிய அணுகுமுறைக்கு மாறிவிட்டது என்பதும் புலனாகிறது.

அந்த வகையில் அரசுக்கு நிலையான போர் நிறுத்தத்தைக் கொண்டு வருவதில் விருப்பமில்லை என்ற கருத்தும் மறைமுகமாக வெளிப்படுகிறது.

ஆனால் விடுதலைப் புலிகள் உருப்படியான—நிலையான—போர் நிறுத்தத்தையே விரும்புகின்றனர். அதன் மூலம் தமிழ்ப் பிரதேசத்தில் இயல்பு நிலையை உண்டாக்க வேண்டும் என்று விரும்புகின்றனர் என்பதனை திரு பாலசிங்கம் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

மேலும்—

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஆகப்பிந்தி அரச தரப்புக்கு அனுப்பிய கடிதத்தில் —

முதலில் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை குறித்துப் பேசிய பின்னர், இயல்பு நிலையைத் தோற்றுவித்த பின்னர், இனப்பிரச்சினை குறித்து ஆராயலாம் என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படுவதற்கு சுமுகமான ஒரு சூழ்நிலை அவசியம் என்பதே நடைமுறை யாதார்த்தம். தமிழ்ப் பகுதிகளில் இயல்பு நிலையை உண்டாக்குவதன் மூலமே அத்தகைய பின்னணியை உருவாக்க முடியும்.

எனவே இப்போதும், ஏற்கனவே இருந்தது போல, பந்து அரசாங்கத்தின் பக்கத்திலேயே மல்லாந்து கிடக்கிறது அதனை அரசு மெதுவாகவேனும்— இலேசாகவேனும்— உருட்டுமா? எப்போது உருட்டப் போகிறது?

சுன்னாகம் காவல்துறை பெரும் கசிப்பு வேட்டை!

வலிகாமம் தெற்கு, டிச 24

சுன்னாகம் காவல்துறையினரின் தேடுதல் வேட்டையின்போது ஊரெழு கிராமத்தில் இரு பெரும் கசிப்பு உற்பத்திப் பேர் வழிகள் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இவ்விரு பேர்வழிகளும் தனித்தனியாக தமது வீட்டில் வைத்து இரவுவேளையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளையில், காவல்துறையினர் திடீரென அங்கு பிரவேசித்து அவர்களைக் கைது செய்தனர்.

அவ்வூர் பொதுமக்கள் கொடுத்ததகவலைத் தொடர்ந்து, பொதுமக்களின் உதவியுடன் இவர்கள் கைதுசெய்யப்பட்டு, காவல் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்களுடன் சேர்ந்து இயங்கியதாகக் கருதப்படும் வேறு சிலரும் கைது செய்யப்பட்டனர்.

காவல்துறையினரின் இத்திடீர் பரிசோதனையின் போது பெரும் அளவிலான கசிப்பு, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கோடாக் சலவை, உற்பத்திச் சாதனங்கள், தளபாடங்கள் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இக்கசிப்பு உற்பத்தியாளர்கள் மீது காவல் துறையினரால் நீதிமன்றில் வழக்குதாக்கல் செய்யப்பட உள்ளதாகவும் தெரியவருகிறது.

(ஒ-152)

சீர்கெட்ட நிலையில் பிரதான வீதி!

சண்டிலிப்பாய், டிச. 24

ஆனைக்கோட்டை சந்தியிலிருந்து நவாலிக்கு ஊடாக சங்கரத்தை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரதான வீதி மீது காவல் துறையினரால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும் தெரியவருகிறது.

(ஒ-135)

வீஸா லொத்தர் மூலம்

அமெரிக்காவில் குடியேற 515 இலங்கையர் தெரிவு!

கொழும்பு, டிச. 24

அமெரிக்காவில் நிரந்தரமாகக் குடியேறுவதற்கு 515 இலங்கையர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் அமெரிக்காவில் நடத்தப்பட்ட வீஸா லொத்தரில் தெரிவு செய்யப்பட்டுள்ள இவர்கள் விரைவில் கிறீன் கார்ட்டுகளைப் பெறுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

இவ் வீஸா லொத்தர் இழுப்பிற்கு இலங்கையில் இருந்து 3லட்சம் பேர் உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து 75லட்சம் பேர் வரை விண்ணப்பித்திருந்தனர். இவற்றில் 15லட்சம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. 60லட்சம் பேரின் விண்ணப்பங்களே பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன.

இந்த வீஸா லொத்தர் இழுப்பில் அமெரிக்காவில் நிரந்தர வதிவிட உரிமை பெற்றவர்களுக்கு அது பற்றிய விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் 1995ஆம் ஆண்டு செப்டெம்பருக்கு முன்னர் தமது ஆவணங்களைப் பூர்த்தி செய்து வைத்திருகவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல்களை வாஷிங்டனில் சட்டத்தரணியாகத் தொழில் புரியும் திரு. சேன பஸநாயக்கா தெரிவித்தார்.

(ஒ-எ)

அடுத்த வீஸா லொத்தர் பெப்ரவரியில் ஏற்கப்படும்

கொழும்பு, டிச. 24

அமெரிக்காவில் நிரந்தரமாக குடியுரிமை பெறுவதற்கான அடுத்த வீஸா லொத்தர் சீட்டிழுப்புக்கான விண்ணப்பங்கள் 1995 பெப்ரவரியில் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நிரந்தரமாக குடியேற விரும்புபவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-எ)

சொக்ஸியின் 4 உறவினரை கைது செய்ய உத்தரவு!

முன்னாள் அரசமைப்பு விவகார அமைச்சரும் ஐ.தே.க. வின் தேசியப்பட்டியல் எம்.பியுமான கே. என். சொக்ஸியின் உறவினர்கள் நால்வரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு கல்கிசை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இரத்மலானையில் இயங்கி வந்த 'ஹென்லி' நிறுவனத்தின் பணிப்பாளர்களான அவர்கள் ஊழியர்களின் சேமலாப நிதியில் மோசடி செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வழக்கின் பிரதிவாதிகளான அவர்களை கைது செய்து கடந்த முதலாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலீஸாருக்கு கல்கிசை நீதிவான் கட்டளையிட்டிருந்தார். ஆனால் இதுவரை அவர்களை கைது செய்ய பொலீஸ் மா அதிபர் பிராங்டி சில்வா உரிய நடவடிக்கையை எடுக்கவில்லை என்று 'யுக்திய' சிங்கள பத்திரிகை தெரிவித்துள்ளது.

சாதாரண பிரஜை ஒருவருக்கு எதிராக இவ்வாறான கட்டளை பிறப்பிக்கப்படும் போது அனுசரிக்கப்படும் நடைமுறைகள் அவர்களின் விடயத்தில் ஏன் பொலீஸாரால் அனுசரிக்கப்படவில்லை என்பது ஆச்சரியமான ஒன்றாக இருப்பதாகவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை—

வழக்கு முடிவடைய முன்னர் பிரதிவாதிகள் நால்வரும் நாட்டை விட்டு வெளியேறக் கூடும் என்பது நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்களை நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க வேண்டாம்என்று கொழும்பு விமான நிலைய அதிகாரிகளுக்கும், குடிவரவு, குடியகல்வு ஆணையாளருக்கும் அறிவிக்குமாறு நீதிவான் நீதிமன்றத்தைப் பணித்துள்ளார்.

(ஐ-10)

தரமற்ற ஐஸ்கிறீம் விற்பனை கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், டிச. 24

யாழ். மாநகரசபைப் பகுதியில் தரமற்ற ஐஸ்கிறீம் விற்பனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழீழ தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அண்மையில் யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பிரபல்யமான ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்களில் ஐஸ்கிறீம் மாதிரிகள் திடீர் பரிசோதனையின் போது எடுக்கப்பட்டு உரிய பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டன.

எடுக்கப்பட்ட எல்லா மாதிரிகளிலும் சில பற்றீரியங்கள் கலந்திருக்கக் காணப்பட்டன. இவை மனித ஆரோக்கியத்திற்கு ஒவ்வாதவையாகும். மழைகாலம் காரணமாக இக்கிருமிகள் இவற்றில் கலந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

எனவே பாவனையாளர்களும், உற்பத்தியாளர்களும் இது குறித்து அவதானமாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அத்துடன் உற்பத்தியாளர்கள் உரிய சுகாதார முறைகளைப் பேணி சரியான உள்வீடுகளை உபயோகித்து தரத்தினை [illegible] காரியங்களை [illegible] படுகின்றனர்.

(ஐ)

புலிகளின் குரல் வானொலியில்

24 — 12 — 1994

சனி இரவு

★ 8-01 —அறிவியற் கலசம்
★ 8-10 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-25 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம்- நகிருஷ்ணா எழுதிய ''போராடும் பெண்ணினம்''
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

25 — 12 — 1994

ஞாயிறு காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 —களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

செயலகத்துக்கு கணனிகள்!

யாழ்ப்பாணம், டிச 24

யாழ். செயலக ஒய்வூதிய கணிப்புப் பிரிவுக்கென கொழும்பிலிருந்து கணனிகள் (கொம்பியூட்டர்கள்) அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஒ-100)

பொது நிகழ்ச்சிகளில் வைத்து

தமிழக ஆளுநரை தாக்க அ.தி.மு.க. சதி!

மணிலா, டிச. 24

போதிய பொலீஸ் பாதுகாப்பு இன்றி இருக்கும் தமிழக ஆளுநர் சென்னா ரெட்டியை ஏதாவது ஒரு பொது நிகழ்ச்சியில் வைத்து தாக்குவதற்கு அ. தி. மு. க. சதித் திட்டம் தீட்டியுள்ளது. இவ்வாறு தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடு தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் —

அ.தி.மு.க. அரசு குறித்து ஆளுநர் குறை கூறியுள்ளதைக் கண்டித்து சென்னை பாண்டி பஜாரில் அ.தி.மு.க மகளிர் அணி போராட்டம் ஒன்றை நடத்தி அவரின் உருவப் பொம்மையை எரித்தது. இது தொடர்பாக அ.தி.மு.க வைச் சேர்ந்த நாற்பது பெண்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

[உ-3]

தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு

பிரதமர் ராவ் வருவாராயின் போராட்டம் நடத்துவோம்!

வாழப்பாடி கடும் எச்சரிக்கை

மணிலா, டிச. 24

தஞ்சையில் நடக்கவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டுக்கு வரவேண்டாம் என்று நாம் கூறியுள்ளதையும் மீறி பிரதமர் நரசிம்மராவ் வருவாரானால் மானில காங்கிரஸ் கட்சியைக் கலைத்தாலும் பரவாயில்லை என்று பெரும் போராட்டம் நடத்தப்படும்.

— இவ்வாறுஇந்திரா காங்கிரஸின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி எச்சரித்துள்ளார்.

—இப்படி அறிவித்துள்ளமை கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய செயல் என்று காங்கிரஸ் கட்சியின் மக்களவை உறுப்பினர் அன்பரசு தெரிவித்துள்ளார்.

(உ-3)

ஈழ அகதி முகாம்களுக்குச் செல்ல

தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க சிபார்சு!

சென்னை, டிச. 24

தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு விஜயம் செய்வதற்கு அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும்படி இந்தியாவின் தேசிய மனித உரிமை ஆணைக்குழு தமிழக அரசை கேட்டுள்ளது.

இது தொடர்பாக அரசு சார்பற்ற தொண்டர் குழுக்கள் விடுத்த கோரிக்கையை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் ரங்கநாத் மிஸ்ரா ஏற்றுக்கொண்டார்.

முகாம்களின் அகதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் அவ்வளவு மோசமாக இல்லை; எனினும் இவ்வசதிகளை மேலும் விருத்தி செய்ய இடமுண்டு என்றும் திரு மிஸ்ரா தெரிவித்தார்.

இது தொடர்பாக அதிகாரிகளுக்கு திட்டவட்டமான சில யோசனைகளை மனித உரிமை ஆணைக்குழு வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

(உ-எ)

மீண்டும் கொழும்புக்கு

கொழும்பு, டிச. 24

திருமலையில் அமைந்துள்ள கடற்றொழில் நீரியல் வள அமைச்சை மீண்டும் கொழும்புக்குக் கொண்டுசெல்வதற்கு அமைக்சரவை தீர்மானித்துள்ளது.

(ஒ-கு-6)

எம். ஜி. ஆர். நினைவு தினம்

யாழ்ப்பாணம், டிச. 24

அமரர் எம். ஜி. இராமச்சந்திரனின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று யாழ்ப்பாணத்தில் கொண்டாடப் படவிருக்கிறது.

அனைத்துலக எம். ஜி ஆர் பேரவையின் ஏற்பாட்டில் இன்று காலை 8 மணிக்கு தாவடியில் உள்ள பேரவைத் தலைமையலுவலகத்தில் எம். ஜி. ஆர். திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து நினைவு கூரல் நிகழ்ச்சியும் நடைபெறும்.

நாளை மாலை 4 மணிக்கு [illegible] யம், சிவச்சுதி சனசமூக நிலையம், குருநகர், பாசையூர், இணுவில், கொக்குவில் பகுதியில் உள்ள எம். ஜி. ஆர். முன்னேற்ற கழகங்கள் ஆகியவற்றில் எம். ஜி. ஆர். திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவிப்பதுடன் சிறப்புரைகளும் இடம்பெறும்.

எம். ஜி. ஆர். நினைவு தினத்தை ஒட்டி நாளைவிளையாட்டு நிகழ்வுகள் இடம் பெறும்.

நாளை மறுதினம் நினைவு தின விழா கொக்குவில் மஞ்சவனப்பகுதி முருகன் ஆலயவெளி அரங்கில் பெரிய அளவில் நடைபெறும்.

(உ-3)

'பட்ஜெட்' டில் புதிய வரிகள் ஏதும் அறவிடப்படமாட்டா!

சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு, டிச. 24

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் விதிக்கப்படமாட்டா என்று தெரிவிக்கப்படுகிறது.

வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை, அமைச்சுகளின் செலவினத்தைக் கடுமையாகக் குறைப்பதன் மூலமே சமாளிக்கப்படும் என்று நிதிஅமைச்சரான ஜனாதிபதி சந்திரிகா அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

மிகப்பெரிய அரச நிறுவனங்களான ரெலிகொம், மின்சார சபை, காப்புறுதிக் கூட்டுத்தாபனம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்றவற்றை விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு பாரிய கடன்களை திருப்பிச் செலுத்தி வரவு-செலவுத் திட்டபற்றாக்குறை நிரப்பப்படும் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-எ)

கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு சலுகை வழங்குமாறு உத்தரவு

இடமாற்றங்களை கவனிக்கத் தனியான கமிட்டி

கொழும்பு, டிச. 24

கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு, சம்பளஉயர்வு, இடமாற்றம் ஆகியவற்றில் முன்னுரிமை அளிக்குமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன பணிப்புரை விடுத்துள்ளார்.

கஷ்டப்பிரதேசங்களில் 4 வருடங்கள் பணியாற்றிய ஆசிரியர்களுக்கே இந்த சலுகைகள் வழங்குமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான விடயங்களை கவனிக்க அமைச்சர் தனியான கமிட்டி ஒன்றையும் நியமித்துள்ளார்.

கல்விச் சேவையில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை விவரத்தை தருமாறும் அமைச்சர் அந்தக் கமிட்டியிடம் கேட்டுள்ளார்.

கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி கலோ விக்கிரமசிங்க, இந்தக் கமிட்டிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

விடுமுறையில் ஊருக்குச் சென்று

இருவரை கொன்று விட்டு முகாம் திரும்பிய சிப்பாய்!

கொழும்பு, டிச. 24

கிழக்கு மாகாணத்தில் இராணுவ முகாமில் பணிபுரியும் சிப்பாய் ஒருவர், விடுமுறையில் தமது சொந்த ஊரில் இருவரைக் கொலை செய்தார் என்றும் —

பின்னர் அவர் தமது இராணுவ முகாமுக்குத் திரும்பி விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விடுமுறையில் பெப்பியாவ கிராமத்துக்குச் சென்ற அந்தச் சிப்பாய் தம்முடன் எடுத்து வந்த ரீ-56 ரக ரைபிளால் விஜேரத்னா என்பவரையும் கொலம்பகே ஜிரின் என்ற பெண்ணையும் சுட்டுக் கொன்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரை கைது செய்ய இராணுவ பொலீஸும், கிரிண்டிவல பொலீஸும் கூட்டாக நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இந்திய அமைச்சர்கள் மூன்று பேர் ராஜினாமா

புதுடில்லி, டிச. 24

இந்தியாவில் ஊழல் சம்பந்தப்பட்ட மோசடிகள் பற்றிய அறிக்கைகளில் விமர்சிக்கப்பட்டிருந்த 3 அமைச்சர்கள் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த இந்திய வரலாற்றிலேயே மிகப் பெரிய பங்குச் சந்தை மோசடியில் சம்பந்தம் இருப்பதாக நாடாளுமன்றக் கமிட்டி குற்றம் சாட்டிய அமைச்சர்கள் ராமேஸ்வர் தக்கூரும், பி. சங்காரானந்தும் பதவி விலகியிருக்கிறார்கள்.

அத்துடன் ராஜினாமாச் செய்த மூன்றாவது அமைச்சரான உணவுத்துறை அமைச்சர் கல்பனாத் ராய் மீது அவர் சர்க்கரை இறக்குமதி விஷயத்தில் உடனடியாகத் தொழிற்பட்டு இறக்குமதிக்கு ஒப்புதல் வழங்காததால் அரசுக்கு பல கோடி நட்டம் ஏற்பட்டது என்று குற்றம் சாட்டப்பட்டது.

(க)

விநோதன் தலைமையில் இன ஒருமைப்பாட்டுக் குழு

கொழும்பு, டிச. 24

சமாதானத்தின் தேவை குறித்து மக்களுக்கு எடுத்துக் கூறி சமாதானப் பேச்சுக்களை ஊக்குவிப்பதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில் எட்டுப் பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

இனவிவகார தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளேயினால் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவுக்கு திரு குமாரசாமி விநோதன் தலைமை வகிப்பார்.

இந்தக் குழுவினருக்கென இனவிவகார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சில் தனியான அலுவலகம் ஒன்றும் திறக்கப்படுள்ளது.

[4ஆம் பக்கம் பார்க்க]

சோதிடர் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், டிச. 24

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த பயிலரங்கும், ஆய்வரங்கும் நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் நடைபெறும்.

அன்றைய நிகழ்வில் செ. பாண்டித்துரை, கி. சதானந்தன், செல்வி ந அன்பரசி ஆகியோர் கட்டுரை வாசிப்பர். ''கைரேகை விஞ்ஞான புதுமைகள்'' என்ற தலைப்பில் திரு சு. நடராசாவும் ராகுதிசை பற்றி திரு. ப. கனகலிங்கமும் ஆய்வுரை வழங்குவர்.

(ஐ)

பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, டிச. 24

தமிழ்மொழி மூல ஆசிரியர்களை தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 28 ஆம் திகதி நடக்கவிருந்த போட்டிப் பரீட்சை பிற்போடப்படலாம் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது

இந்தப் பரீட்சையை எதிர்வரும் 31 ஆம் திகதி நடத்த தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் —

எனினும் புத்தாண்டு வேளையாதலால் அதனை மேலும் ஒத்திப்போட்டு அடுத்த மாதம் 7ஆம் திகதி நடத்தவும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3-4)

இன்று

தென்மராட்சிகல்விகோட்ட பாடசாலைகளின் தொண்டர் ஆசிரியர்களுக்கான பொது அறிவு, பொது ஊச்சார்பு பயிற்சி வகுப்புகள் இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு சாவகச்சேரி புறிபேக் கல்லூரியில் நடைபெறும்

(ஒ-117)

★ ★ ★

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஆண்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு செயலக வெளிக்கள அலுவலர் பணிமனையில் நடைபெறும்.

(ஒ 117)

போராட்டம் இடைநிறுத்தம்

கொழும்பு, டிச 24

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் மேலதிக விடுதி வசதிகளைப் பெறுவதற்காக பத்து நாட்களாக நடத்தி வந்த போராட்டத்தை இடைநிறுத்தி வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுடன் பேச்சு நடத்தியதை அடுத்து இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் சங்கத் தலைவர் அஜித் ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள், அரசின் சார்பில் மூன்று அமைச்சர்கள், ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஒருவர், கட்டடத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் இப்பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

வைரமுத்து வாசுதேவன்
(வாசு)

(கூட்டட மேற்பார்வையாளர், கரம் நிறுவனம், கௌரவ பொருளாளர் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சி. க. கூ. சங்கம்)

நீர்வேலி மேற்கு மாசிவனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், முன்னாள் ஆய்வு நிறுவன புத்தூர் பிரதேச இணைப்பாளரும் ஆகிய செல்வன் வைரமுத்து வாசுதேவன் 19 – 12 – 94 அன்று காலமானார்.

இவர் வைரமுத்து நாகரெத்தினம் தம்பதிகளின் செல்வப் புத்திரனும், சே துராசா (பாரெய்ன்) பலராமன் (நாதன் உரிமையாளர், தர்க்கா பாடசாலை போக்குவரத்து சிற்றூர்தி சேவை), நாகேஸ்வரி, விஜயரங்கன் விஷ்ணு (டென்மார்க்) விஜயகுமார் (பாரெய்ன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், லதா, குகனேசன் (சமுநாதம் வன்னிப் பதிப்பு) ஆகியோரின் உடன் பிறவாத சகோதரனும், இந்திராணி, தவமலர், காராளசிங்கம் (பாரெய்ன்) நாகேஸ்வரி, கணநாதன் (பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-12 94) சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி, சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்றிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;
அப்புத்துரை வைரமுத்து
குடும்பத்தினர்.

மாசிவன்,
நீர்வேலி மேற்கு. (34333)

சின்னத்தம்பி திருவிளங்கம்

மானிப்பாயை பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி திருவிளங்கம் (இளைப்பாறிய பெருந்தெருக்கள் திணைக்களம் ஓவசியர்) 23-12-94 அன்று கோண்டாவிலில் காலமாகி விட்டார்.

இவர் இரத்தினமலரின் அன்புக் கணவரும், திருமதிகள் சந்திரவதனா தியாகலிங்கம், அமிர்தவதனா மகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), ஜெயச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதிகள் நல்லம்மா கந்தையா, இரத்தினம் பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதிகள் பரிபூரணம் சுப்பையா, தனலக்மி சண்முகராஜா, அருந்ததி பரராஜசிங்கம், புனிதவதி வேலாயுதம், சந்திரசேகரம், தர்மராஜா காலஞ்சென்ற இராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24–12–94) சனி காலை 11-00 மணிக்கு நடைபெற்று, கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
வே. சிவசிலன்.
(பெறாமகன்)

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் கிழக்கு. (34332)

பேதுருப்பிள்ளை செல்லத்துரை
(மயிலங்கூடல்)

வயாவிளானைப் பிறப்பிடமாகவும், இளவாலை மயிலங்கூடலை வாழ்விடமாகக் கொண்டவரும், தற்போது இடம் பெயர்ந்து அராலி வடக்கு, நாகேந்திரமடம் எனும் விலாசத்தில் வசித்தவருமான பேதுருப்பிள்ளை செல்லத்துரை காலமானார்.

இவர் காலஞ்சென்ற றோசமுத்துவின் அன்புக் கணவரும், திரு. செ. பத்திநாதர் (தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க வர்த்தக முகாமையாளர், யாழ். ஐக்கிய நாணய சங்க சமாசத்தின் தெல்லிப்பழைப் பிராந்திய தலைவர்), திரு. செ. நவரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதிகள் மேரிராஜேஸ்வரி, திரேசா சவுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், பத்மா தேவமலர், மரியராணி, அன்ரன் ஜெயராசா, ஜெயராணி, காலஞ்சென்ற நவயோகராசா ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிச் சடங்குகளுக்காக இன்று (24–12–94) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் தற்போதைய இல்லத்திலிருந்து மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிப்பிலிச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தகவல்:
செ. பத்திநாதர்
(மகன்)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.. (34331)

சின்னத்தம்பி கைலாசபிள்ளை

யாழ்ப்பாணம், டொய் விழுந்தானைச் சேர்ந்த பிரபல கார் ஒப்பந்தக்காரரான சின்னத்தம்பி கைலாசபிள்ளை 22–12–94 அன்று காலமானார்.

இவர் பகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜெயில் காட் சுப்பிரமணியம், மற்றும் நவரத்தினமணி ஆகியோரின் சகோதரரும், குணரட்ணம், தியாகராஜா, நகுலேஸ்வரி (கனடா), கோணேஸ்வரி, சறோஜினிதேவி, ஜீவராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அழகமமா, இரத்தினேஸ்வரி பரமநாதன் (கனடா), சுதிர்காமநாதன், சண்முகலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், கவிதா, வனிதா, குமுதினி, மிதிலா, திலீபன், ராகுலன், சாதனா, சுகிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 25–12–94 நாளை முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்;
கை. குணரட்ணம்
[மகன்]

48/5, 1 ஆம் ஒழுங்கை.
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம், [34338]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24—12—94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

நவம்பர் மாத ஒளிவீச்சு ஒளி நாடா வெளிவந்தது!

யாழ். ஸ்ரீதரில் இன்று இலவச காட்சி

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான "ஒளிவீச்சு" வீடியோ சஞ்சிகையின் நவம்பர் மாதத்திற்கான ஒளிநாடா வெளிவந்து விட்டது.

தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாக நினைவு கூரப்பட்ட மாவீரர்நாள் நிகழ்வுகள், வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கடற்படையினரின் தரையிறங்கும் போர்க்கப்பல் மீதான மேஜர் வித்தியின் கரும்புலித்தாக்குதல், தேசியத்தலைவரின் ஆசிச் செய்தியுடன் இனிதே நடைபெற்ற புலிகளின்குரல் 4 ஆம் ஆண்டு நிறைவுவிழா, மற்றும் "சமகாலக்கண்ணோட்டம்" எனும் அரசியல் நோக்கு, "வெள்ளைத்துணி" எனும் குறும்படம் ஆகியன வற்றுடன் மேலும் பல வழமையான அம்சங்களோடு இம்மாத ஒளிவீச்சு வெளிவந்துள்ளது

இவ்ஒளிநாடா இன்று சனிக்கிழமை பிற்பகல் 6.00 மணிக்கு யாழ். ஸ்ரீதர் திரையரங்கில் இலவச காட்சியாக காண்பிக்கப்படவுள்ளது.

உலக தமிழ் மாநாட்டுக்கு அரசின் குழுவும் செல்லும்!

தஞ்சாவூரில் நடைபெற விருக்கும் எட்டாவது உலக தமிழ் மாநாட்டுக்கு இலங்கை அரசு 4 பேர் அடங்கிய அரசுக்குழு ஒன்றை அனுப்பி வைக்கவிருக்கிறது.

கலாசார அமைச்சு இக்குழுவில் இடம்பெற வேண்டிய நான்கு பேரின் பெயர்களையும் சிபார்சு செய்துள்ளது.

ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்காக இந்த நால்வரின் பெயர்களையும் கலாசார அமைச்சு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

மாதாந்த அறிவியலரங்கு - 10

இன்று **24 · 12 · 94** சனிக்கிழமை பிற்பகல் **3** மணி

இடம்: உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்

தலைப்பு:

வானியலும் சோதிடமும்

நிகழ்த்துபவர்: வேதாகம சோதிட பூஷணம்

சிவஸ்ரீ சி. சிதம்பரநாத குருக்கள்
(திருக்கணித நிலையம் மட்டுவில், சாவகச்சேரி)

அறிவுத் தேடல் உடைமோர் வருக.

நூலக அபிவிருத்திச் சபை

சாவ. பிரதேசசபை பொதுநூலகம்
உசன் மிருசுவில்

துணைக்கரம்:
திரு. க. பேரம்பலம்
உசன், மிருசுவில்
(34336)

பருத்தித்துறை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

லொறிக்கு உருவமைத்தலும், வர்ணம் பூசுதலுக்குமான கேள்விப் பத்திரம்

எமது சங்கத்தின் த1 — 4726 (27/1092) இலக்க லொறிக்கு உருவமைப்பதற்கும், லொறி முழுவதற்கும் வர்ணம் பூசுவதற்கும்;

த1 — 4716 இலக்க லொறிக்கு வர்ணம் பூசுவதற்கும் இத்தால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி லொறிகளை எமது சங்கத்தில் பார்வையிட்டு இதற்கான கேள்விப் பத்திர படிவத்திற்கு ரூபா 25/- செலுத்திப் பெற்று, உங்கள் விண்ணப்பங்களை **1994 — 12 — 30** ஆம் திகதிக்கு முன் "தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை" என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

— பொதுமுகாமையாளர்.

1994-12-22 (சி-10089)

அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
அமைய ஆண் சுத்திகரிப்பு தொழிலாளிகள்
(மலசலகூடம்)

வெற்றிடங்கள்

இவ்வைத்தியசாலையில் அமைய ஆண் சுத்திகரிப்புத் தொழிலாளிகள் (மலசலகூடம்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. 05-01-1995 ஆம் திகதியன்று 18 வயதிற்கு மேற்பட்டவராகவும், 40 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரர்கள் இவ் வைத்தியசாலையிலிருந்து 3 மைல் சுற்றாடலில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எமது பணிமனையில் 05-01-95 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர்கள் பின்பு என்னால் அறிவிக்கப்படும் திகதியில் எனது பணிமனையில் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

வைத்தியகலாநிதி
(செல்வி) என். கனகரட்டினம்,
பணிப்பாளர்,
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (சி/10091)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிச. 24

அரியாலை ஐக்கிய கழகம் அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்தமாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

பிற்பகல் 2.45 மணி – சென். அன்ரனீஸ் அணி எதிர் பொற்பதி அணி.

★ 4.00 மணி:- பாடும்மீன் அணி எதிர் கலைவாணி அணி.

★ ★ ★

அமரர் மு. சிவரெட்ணம் ஞாபகார்த்தமாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட (செற்அப்) சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 3. 30 மணி முதல் சரஸ்வதி ச. ச. நிலையத்தில் நடைபெறவுள்ளது

இறுதிப்போட்டியில் ஆவரங்கால் 'ஏ' அணியை எதிர்த்து பாரதி 'ஏ' அணி மோதும். பிரதம விருந்தினராக யாழ். திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கலந்து கொள்வார். (ஐ-20)

கிறிஸ்மஸ் ஆராதனை

யாழ்ப்பாணம், டிச, 24

வடபிராந்திய இலங்கை வைத்திய சாலை கிறிஸ்தவ ஐக்கியத்தினரால் நடத்தப்படும் கிறிஸ்மஸ் ஆராதனை இன்று முற்பகல் 11 மணி முதல் யாழ். ஆஸ்பத்திரி வளாகத்தில் உள்ள அன்னை வேளாங்கண்ணி மாதா தேவாலயத்தில் நடைபெறும் யாழ். சீயோன் தேவாலய பிதா ஜே. கே. பிலிப் ஆராதனையை நடத்துவார். (ஐ-15)

தமிழ்ப் படத்தில் கருணாநிதி!

சென்னை, டிச. 24

தி.மு.க தலைவர் கருணாநிதி தமிழ்ப்படம் ஒன்றில் நடிக்கின்றார்.

இது சம்பந்தமான படப்பிடிப்பு அண்மையில் அவரது சென்னை இல்லத்தில் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனினும் —

முதற்கட்டப் பேச்சுக்களின் முடிவில் இருதரப்பினாலும் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அம்சங்களையே தலைவர் பிரபாகரன் தொடர்ந்து வலியுறுத்தியிருப்பதால், அதற்கு மறுப்புத் தெரிவிப்பதும் அரசுக்குக் கஷ்டமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாணத்துக்கே அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டனர்; தங்களை இலங்கையின் வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டாம் என்றும் அவர்கள் வற்புறுத்தினர்.

அகதிகளை தாயகத்துக்கு திருப்பி அனுப்புவதை மீண்டும் ஆரம்பிப்பது குறித்தும்— யாழ்ப்பாணத்துக்கு மட்டுமே செல்லவிரும்பும் அகதிகள் குறித்தும் —

மத்திய அரசாங்கத்துடன் நான் பேச்சு நடத்தி உள்ளேன்" — என்றார்.

தங்கள் மீது வெளிநாட்டார் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று அவர்கள் தெரிவித்த கோரிக்கையை திரு. மிஸ்ரா ஏற்றுக்கொண்டார். (உ-எ)

ஆசிய..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா அரசு ஆசிய அபிவிருத்தி வங்கியை கேட்டுள்ளது எனினும் வங்கி நிர்வாகத்திடமிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லையென்றும் நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

நத்தார் புதுவருடத்திற்கு
அழகான
மெழுகுதிரிகளை
பரிசளியுங்கள்.

கொப்பி வகைகள்
மலிவாக
பெற்றுக் கொள்ள.

கண்ணன் கீதை
112, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/44)

விநோதன்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் முதலாவது கூட்டம் அடுத்த மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மக்கள் மத்தியில் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான கருத்தரங்குகள், கூட்டங்களை இந்தக் குழு நாட்டின் பல பகுதிகளிலும் நடத்தவுள்ளது.

சமயத் தலைவர்கள், கல்விமான்கள், நிபுணர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்கருத்தரங்குகளுக்கு அழைக்கப்படுவர்.

இந்தக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது கருத்தரங்கு நாளை மறுதினம் பம்பலம்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (உ-ஐ-9)

மரண அறிவித்தல்கள்

மாணிக்கம் சிராளன்
(சொக்கர்)

மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்ட மா. சிராளன் (சொக்கர்) (ப.நோ.கூ. சங்கம், சங்கானை), 21–12–1994 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி கமலாதேவியின் அன்புக் கணவரும் செல்வன் குகனேசனின் (திறந்த பல்கலைக்கழகம்) ஆசைத்தந்தையும், திரு. கணேசலிங்கத்தின் (ச. ப. நோ. கூ. சங்கம்) சகோதரரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று நண்பகல் 12–00மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி.

டச்சு றோட்,
மூளாய். [8099]

சுப்பிரமணியம் விசயரெத்தினம்
புங்குடுதீவு - 3

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் விசயரெத்தினம் பிரான்சில் 21 – 12 – 94 இல் காலமானார்.

இவர் ரதிதேவியின் அன்புக் கணவரும், அ. சுப்பிரமணியம் (தம்பிமுத்து — இளைப்பாறிய அதிபர்), அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நமசிவாயம் அன்னலெட்சுமியின் அன்பு மருமகனும், பாலரெத்தினம் [கனடா], இராசேஸ்வரி, புவனேஸ்வரி, குணரெத்தினம் [கனடா], சந்திரேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஷ்ணபிள்ளை [கனடா], பங்கயற்செல்வி [கனடா] காலஞ்சென்ற பரமநாதன், புஷ்பராணி [கனடா], கணேசமூர்த்தி [பிரான்ஸ்], ரவீந்திரன் [பிரான்ஸ்], சந்திராதேவி, சிறீதரன் [பிரான்ஸ்], ரகுநாதன் ஆகியோரின் மைத்துனரும், முத்தம்மா, குணேஸ்வரி, வில்வரெத்தினம் [அம்பிகாபதி] ஆகியோரின் பெறாமகனும், க. யோகச்சந்திரனின் சகலனும், பாக்கியலெட்சுமியின் ஒன்று விட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி ந. அன்னலெட்சுமி
[மாமியார்]
[புங்குடுதீவு – 6]

16, பழம் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [34337]

திருமதி சிவக்கொழுந்து பொன்னம்பலம்

வட்டு. கிழக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து பொன்னம்பலம் நேற்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் பொன்னம்பலத்தின் மனைவியும், செல்வி நித்தியலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை, வட்டு இந்துக் கல்லூரி), திருமதி அன்னலட்சுமி துரைசிங்கம் (இளைப்பாறிய கோட்டக் கல்வி அதிகாரி மருதனார்மடம்), செல்வி தனலட்சுமி, திருமதி சறோஜினி தேவசகாயம் (இளைப்பாறிய மொனிற்றர் தபால் தந்தி தொலைத்தொடர்புத் திணைக்களம்), திருமதி தங்கமுத்து சிவபாலசுப்பிரமணியம் (தொண்டர் – இளைப்பாறிய திடீர் பரிசோதனைக் குழு C.T.B), திரு. பத்மநாதன், Dr. இராமநாதன் (லண்டன்) ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-12-94) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி நித்தியலட்சுமி
(மகள்)

வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி. (34339)

கந்தையா கோபாலபிள்ளை

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், இல-12, மணல்தறை வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரும், முன்னாள் வேலணை மத்திய கல்லூரி ஆசிரியரும், இளைப்பாறிய கிரேஷ்ட வரிமதிப்பீட்டாளருமான கந்தையா கோபாலபிள்ளை நேற்று இரவு சிவபதமடைந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான கந்தையா – தங்கம்மா தம்பதிகளின் கவிஷ்ட புத்திரனும், கலாவல்லியின் அன்புக் கணவரும், குமுதினி (ஆசிரியை வவுனியா கொன்வென்ற்), ரேணுகா (கனடா), மாலினி (பொளதிக விஞ்ஞானம் 2ம் வருடம் யாழ். பல்கலைக் கழகம்), கோசலா, கோகிலா (வேம்படி மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையும், —

சபாநாயகம் ஆசிரியர், வவுனியா கொன்வென்ற், செல்வநிதிநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், குணாளியின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கனகலிங்கம், விஸ்வலிங்கம் (ஜெயபுர றைஸ் ஏஜன்சி, கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை — அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
திருமதி க. கோபாலபிள்ளை
(மனைவி)

12, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (34340)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org